මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PFD/PMD/Domestic/Cir.03/2020
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 11 .01.2021

**அரச நிதிச் சுற்றுநிருப இல: 03/2020 (i)**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும்
அரசுடைமை கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் தொடர்பான கொள்கை**

மேற்குறித்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2020.10.09 ஆம் திகதிய அரச நிதித் திணைக்களத்தின் 03/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பத்தியின் கீழ் வரும் 3.1 iii (ஆ), iv மற்றும் v ஆகிய உப பத்திகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

**"3.1 நிர்மானத் தொழிற்றுறை;**

iii. ஆ) (i) ரூபா 150 மில்லியனுக்கு அதிக மற்றும் ரூபா 300 மில்லியனுக்கு குறைவாக அல்லது சமனாக மதிப்பிடப்பட்ட செலவின ஒப்பந்தங்களுக்கு விலைமனுக்கள் கோரப்படும் போது நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சி3 மற்றும் சி2 தரப்படுத்தலைக் கொண்ட ஒப்பந்தக் காரர்களிடம் மாத்திரம் விலைமனுக்கள் கோரப்பட வேண்டும்.

ஆ) (ii) ரூபா 300 மில்லியனுக்கு அதிக மற்றும் ரூபா 600 மில்லியனுக்கு குறைவாக அல்லது சமனாக மதிப்பிடப்பட்ட செலவின ஒப்பந்தங்களுக்கு விலைமனுக்கள் கோரப்படும் போது நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சி2 மற்றும் சி1 தரப்படுத்தலைக் கொண்ட ஒப்பந்தக் காரர்களிடம்[1] மாத்திரம் விலைமனுக்கள் கோரப்பட வேண்டும்.

[1] "உள்நாட்டு பெரும்பான்மை உரித்துடைய நிறுவனம், உள்நாட்டு நிறுவனம் அல்லது உள்நாட்டுக் கம்பனி" என்பது இலங்கையினரால் 51 சதவீதத்திற்கும் அதிகமான உரிமையுடன் இலங்கையில் தொடர்புடைய அதிகாரத்துடன் முதலில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதுடன், குறித்த வரைவிலக்கணம் இந்த ஆவணம் முழுவதுக்கும் ஏற்புடையதாகும்.

iv. இத்தொழில்களில் அரசுடமை தொழில்முயற்சிகளின் (SOE) வகிபாகத்தினைக் கருத்திற்கொண்டு, அவை போட்டி அடிப்படையில் ஒப்பந்தமொன்றுக்கான விலைமனுவினைச் சமர்ப்பிக்கும் போது, அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு ஏனைய அனைத்து ஒப்பந்தக்காரர்களிலும் பார்க்க 5 சதவீத முன்னுரிமை வழங்கப்படும். இது தொழில்நுட்ப மதிப்பீட்டிலன்றி நிதி மதிப்பீட்டில் மட்டுமே கருத்திற்கொள்ளப்படும்.

v. விலைமனு நம்பத்தகாதது என்பதை உறுதிப்படுத்த, பின்வரும் அளவுகோல்களை பின்பற்ற வேண்டும்;

அ) விலைமனுப் பெறுமதி பொறியிலாளர் மதிப்பீட்டிலும் பார்க்க 11 சதவீதத்திலிருந்து 19 சதவீதம் வரை குறைவாக காணப்படுமிடத்து செயல்நிறைவேற்றப் பொறுப்புப் பிணை (Performance Bond) 5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆ) விலைமனுப் பெறுமதி பொறியிலாளர் மதிப்பீட்டிலும் பார்க்க 20 சதவீதத்திலிருந்து 29 சதவீதம் வரை குறைவாக காணப்படுமிடத்து செயல்நிறைவேற்றப் பொறுப்புப் பிணை (Performance Bond) 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும்.

இ) விலைமனுப் பெறுமதி பொறியிலாளர் மதிப்பீட்டிலும் பார்க்க 30 சதவீதம் அல்லது அதற்கு அதிகமான சதவீதத்தில் குறைவாக காணப்படுமிடத்து அவ் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட வேண்டும்.

ஒப்பம்/ எஸ்.ஆர். ஆட்டிகல

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:-

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவையின் செலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்